ப்ப், டேறுனசொரூப்பரிபூரணமாறுவ் முழு
தும் பேசொணுதே ....*

இ-ள்: வியவகாரதசையிலே கெடுதலில்லாத
அஞ்ஞானமுழுது நீங்குமுவகைகளைச்சொல்லு
மிடத்தில் ஜகத்தாதாத்மியத்தைநீங்கிஸம்யா
சம்பன்னனில அஞ்ஞானத்தில் நான்கிலொரு
பங்குகெடும். த்வம்பதசோதனையினுல்சரீரத்
ரயதாதாத்மியமான சீவதரிசனம்பண்ணிச்ச
ரீரத்ரயமுந்தானல்லதான் இவற்றிற்கு விலக்ஷ
ணனென்றறிந்தால் அஞ்ஞானத்திற்பாதிகெ
டும். சீவசைதன்யதாதாத்மியமான சிவஸாக்ஷி
சைதன்ய தரிசனம்பண்ணவே முக்காற்பங்கு

கெடும் தத்பத சோதனைபண்ணி ஈச்வரனைத ன்ய தாதான்மியமான பரிபூரணனைத தன்ய த ரிசனம்பண்ணி அதுவானால் அஞ்ஞானமுழு துங்கெடும் எ-று .... (௩ம)

(முத்தர் பெத்தர் லக்ஷணம்)

முத்தரையும்பெத்தரையுமுகக்குறியானகக் குறியான் முழுதுந்தேரின், மெத்தெனவாகி ய மொழியு மானந்தபரவசத் தான் மிகுந்த சோர்வுஞ், சித்தநிலைதிரியாதசெல்வமுமாயி ருப்பர்நல்லோர் தீயோரெல்லா, மித்தகமை யோர்களையுமிகழ்ந்து புகழ்ந்தோர்க்குறவா யிருப்பர்தாமே. ....*

இ-ள் முத்தரையும்பெத்தரையும்முகக்குறிய கக்குறிகளால் முழுதுமறியப்புகின்மிர்துவா கியவசனம் ஆனந்தபரவசத்தினாலே மெய்ம் மறத்தல் பிராரப்தவசத்தினால் அஷ்டமஹா சித்திகள் வந்துபொருந்தினாலும்மனம்வேறு படாமலிருத்தல் இவைமுதலியகுணங்களுட ன்கூடிக்கொண்டிருப்பவர் ஞானிகளாகியமு க்தரென்றறியத்தக்கவர் அஞ்ஞானிகளாகிய பெத்தரோவென்றால் இப்படிப்பட்ட ஞானி களை யிகழ்ந்தும் தம்மைப்புகழ்கிறவர்களுக் குறவாகியும் இகழ்கிறவர்களுக்குப்பகைவரா

கியுமிருப்பர்களென்றவாறு . . . . (௩௧)

(அஞ்ஞானஞானங்களின்லக்ஷணம்)

ஏற்றபிரபஞ்சமதே நித்தமென்றும் பிரமமென்பதில்லையென்றுந், தோற்றமுடலானென்றுந் துளங்குவதேயஞ்ஞானதுக்கமாகுஞ், சாற்றுபிரபஞ்சமெலா மனித்தமென்றும்பிரமமது தானேயென்றும், வேற்றுடல்வெற்றுடலென்றும் விரிந்துணரப்பெறுமது வேதாந்தஞானம் . . . . *

இ-ள் பொருந்தியப்ரபஞ்சமேநித்யமென்றும் பிரமமென்பது இல்லையென்றும் பிரத்யக்ஷமாகக்காணப்படுகின்றசரீரமேதானென்றுங்கலங்குகின்றதே துக்கமயமாகியவஞ்ஞானமாம். அஞ்ஞானிகள் நித்தியமென்று சொல்லுகின்ற ப்ரபஞ்சமெல்லாம் மித்தையென்றும்பிரமசொரூபமே தானென்றும் தனக்கன்னியமாய்ஸ்தூலசூக்ஷமகாரணமாகியசரீரத்ரயங்களும் பொய்யென்றுங்கண்டுஅகண்டாகாரமாய்த்தன்னையறியப்பெறுகின்றதே வேதாந்தஞானமாம் எ-று . . . . (௩௨)

(தங்குருவைப்புகழ்தல்)

இருளகற்றுநால்வேதத் துபநிடதமென்

றான்கிளெங்கோன்சொன்ன, பொருளதனை
நெஞ்சகத்தே சௌபாகய குருவென்னும்
பொருளினேறு, மருளகற்றும்படியழுத்தித்த
மிழ்போலு மதனையொருவழியென்றான்கா,
யருளகத்திலிருந்துரைத்த வதிசயமேயதிசய
மற்றறிகிலேனே ....*

இ-ள் அஜ்ஞானத்தைநிவிர்த்திபண்ணுகின்ற
நாலுவேதங்களுடைய முப்பத்திரண்டுபநிஷ
த்துக்களிலெடுத்துஎங்கள்ஸ்வாமியாகியவியா
ஸமகாமுனி திருவாய்மலர்ந்தருளிய பொரு
ளினைச்சௌபாக்கிய குருவென்னும்பொருளி
னேடும் அடியேனுடைய இருதயத்தின் மரு
ட்சியகலும்படி அழுத்தித்தமிழென்று சொ
ல்லப்பட்டபாஷையிலப்பொருளை ஒருவழியா
ய்முப்பத்திரண்டுசெய்யுளாக அருளானதுஉள்
ளத்தி லிருந்துசொல்வித்த அதிசயமேயதி
சயமல்லாமல் மற்றோரதிசயம் அறியேன்
எ-று.. —இச்செய்யுள் இந்நூலாசிரியர்தங்
குருவைப்புகழ்ந்துகூறியது........(௩௩)

உபநிடதவுரைமுற்றிற்று



பிரசித்தபத்திரிகை.

பெயர்	விலை	அணா
ஸ்ரீராமர்தாலாட்டு		க
மணவாளநாராயணசதகம்		௮
திரிகடுகவுரை		௰
பார்த்தசாரதிபஞ்சரத்னம் பார்த்தசாரதிவிருத்தம்		உ
ஸ்ரீகிருஷ்ணஸ்வாமிதூதுரை		௫
சிவவாக்கியர் பாடல்		௬
ஞானக்கொம்மி		௬
உபநிடதவுரை		௮
சகிவர்ணபோதகவுரை		௰௬
பகவற்கீதை வசனம்		௫௨

இப்புத்தகங்களும் மற்றபுத்தகங்களும் வேண்டியவர்கள் சென்னைப்பட்டணத் திருவல்லிக்கேணி அவதானம்பாப்பையர் வீதியில் ௯௫ வது நம்பருடைய வீட்டில் வாங்கிக்கொள்ளலாம்

உ

ஓம் மாதா மயம் ஜெகத்.

ஸ்ரீ முருகன் நித்திய பாராயண தவநெறித் திருமுறை.



உயர் ஸ்ரீ முருகதாஸ் அவர்களால்

தொகுக்கப்பெற்று

கொழும்பு

தத் சங்க அன்பர்களால்

வெளியிடப்பட்டது.

ஓம் மதாமயம் ஜெகத்
ஸ்ரீமுருகன் நித்திய பாராயண
தவநெறித் திருமுறை.

பொருளடக்கம்.

முன்னுரை

ஓம் மாதா மயம் ஜெகத்,
வேலும் மயிலும் துணை.


பாடாதாரைப் பாடவைத்துப் பண்பறிக்கும் பெருமாளின் திருவடியே துணையென நண்ணி பாடும் பணியே பணியாகப் பெற்ற அன்பர் பலருள் அருணகிரி ஒருவர். அவர் "யாமோதிய கல்வியும் எம்மறிவும், தாமேபெற வேலவர் தந்ததென" உலகை யெல்லாம் வேலனின் பிரதிபிம்பங்களென எண்ணி ஆண்டவன் தனக்கு அளித்த அருள்பாக்களான திருப்புகழ், திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரனுபூதி, முதலியவைகளை "நெஞ்சக்கனகல்லும் நெகிழ்ந்துருக" கருணையோடு உலகிற்கு அளித்துள்ளார்.

எல்லாத் தெய்வங்களும் கொண்டாடும் மேலான தெய்வம் கலியுக வரதனை கந்தனே யெனவும், அவன் தன்னிடம் காட்டிய அபார கருணையையும் சொல்லிச் சொல்லி அருணகிரி உருகியுள்ளார்.

நாமும் அவர்போல் அனுபூதி பெற்று ஆனந்தக் கூத்தாட வேண்டுமல்லவா? சொருபமற்று தொடர் பற்றுத்தானே தோன்றினவனை ஆண்டவனை நம் உள்ளக்குகையில் சிறைபிடிக்க வேண்டாமோ? நிச்சயமாக அப்பரம் பொருளை நாம் கட்டுப்படுத்தியே ஆக வேண்டும். அதற்கு அனுபூதிபெற்ற அன்பர்களின் பாடல்களால் தொகுக்கப்பெற்ற இம் முருக நித்திய பாராயணத் தவநெறித் திருமுறையும் உதவியாயிருந்து அன்பர்களனைவரும் ஆண்டவனைக் கட்டியணைத்துக் கூத்தாடி, இன்ப, துன்ப, இறப்பு, பிறப்பு கடந்து தானேயே தானாகி வாழ வைக்கட்டும்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே"

ஓம்மாதாமயம் ஜெகத்.



சமர்ப்பணம்.

எல்லாவுயிர்களுள்ளும் இறைவனது அன்பே

நிறைந்துள்ளது என்று உணர்ந்து

உலகத்தின் நன்மைக்காகவே

உடல் பொருளாவி மூன்றையும்

தத்தம் செய்துவாழும் சத்புருஷர்

பாதகமலங்களுக்கு

ஸ்ரீமுருகன்

நித்திய பாராயண தவநெறித் திருமுறையைச்

சமர்ப்பணம் செய்கிறோம்.

(கொழும்பு) சத் சங்கத்தவர்கள்.



[illegible]

ஓம் மதாமயம் ஜெகத்

ஸ்ரீ முருகன் நித்திய பாராயண தவநெறித்திருமுறை.

குரு தோத்திரம்

ராகம் - நாட்டை

அழுந்தொறும் அணைக்கு மன்னை   1.
    அறிவிலாது ஓடி யோடி
விழுந்தொறும் எடுக்கு மப்பன்
    விளையாடும் போது தோழன்
தொழுந்தொறும் காக்கும் தெய்வம்
    சொந்தமாய் எடுப்போர்க் கெல்லாம்
குழந்தை யிப்படி யுலாவு மென்
    குருநாதர் வாழி வாழி.

அருணகிரியார் துதி.

ராகம் - ஆனந்தபைரவி

அந்தாதி யில்லா இறைவனுக்,
கந்தாதி யன்றுரைத்தும்
நந்தா வகுப்பலங்கார மவற்கே நனி புனைந்தும்
முந்தா தரவி லவன்புகழ் பூதியு முற்றுஞ்
சொன்ன
எந்தாய் அருணகிரிநாத எனைநீ யாண்டருளே. 2

3. அடியார் வணக்கம்.

ராகம் - காம்போதி

சிந்தை தெளிந்து சிவமானோர் எல்லோர்க்கும்
கொத்தடிமையான அடிநான் பராபரமே

தம்முயிர்போல் எவ்வுயிரும் தானென்று
தண்ணருள்கூர்
செம்மை யருக் கேவல் என்று செய்வேன்
பராபரமே.

4. விநாயகர் துதி.

ராகம் - ஆனந்தபைரவி

ஏரானைக் காவிலுறை என்னானைக் கன்றளித்த
போரானைக் கன்றதனைப் போற்றினால்-வாராத
புத்திவரும் பக்திவரும் புத்திர உற்பத்திவரும்
சக்திவரும் சித்திவரும் தான் (1)

ராகம் - ஆனந்தபைரவி   தாளம் - ஆதி

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி-
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி;
இன்பரசத் தேபருகிப் பலகாலும்-
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே;
தம்பிதனக் காகவனத் தணைவோனே-
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே;
அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே—
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.(2)

ராகம் - மோகனம் தாளம் - ஆதி

பக்கரைவி சித்ரமணி பொற்கலணை யிட்டநடை
பக்ஷியெனு முக்ரதுர கமுநீபப்-
பக்குவமலர்த்தொடையும் அக்குவடுபட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்;
திக்கதும திக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
சிற்றடியு முற்றியப னிருதோளும்-
செய்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்விருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே;
இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடனெய்
எட்பொரிய வற்றுவரை யிளநீர்வண்-
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை தனிமூலம்;
மிக்கஅடி சிற்கடலை பக்ஷணமெ னக்கொளொரு
விக்கினச மர்த்தனெனு மருளாழி-
வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய பெருமாளே. (3)

5. உபதேசம்.

ராகம் - கேதாரகௌளம்

தடுங்கோள் மனத்தை விடுங்கோள்
வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோ ளிருந்த படியிருங்
கோளெழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந்
திறக்கத் தொளைக்கவைவேல்
விடுங்கோ னருள்வந்து தானே
யுமக்கு வெளிப்

ராகம் - பைரவி

நினைந்து நினைந்துணர்ந் துணர்ந்து நெகிழ்ந்து
நெகிழ்ந்தன் பே
நிறைந்து நிறைந்தூற் றெழுங் கண்ணீரத
னூடாப்பு
நனைந்து நனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே யென்னுரிமை நாயகனே
யென்று
வனைந்துவனைந் தேத்துது நான் வம்மினுலகியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங்
கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்
சொல்கின்றேன்
பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருண
மிதுவே. (2)

6. முருகனை வர வேண்டல்

ராகம் - காமஸ் தாளம் - ஆதி

காரணமா தாகவந்து புவிமீதே-
காலனணுகாதிசைந்து கதிகாண;
நாரணனும் வேதன் முன்பு தெரியாத-
ஞான நடமேபுரிந்து வருவாயே;
ஆரமுத மான தந்தி மணவாளா-
ஆறுமுக மாறிரண்டு விழியோனே;
சூரர்கிளை மாள வென்ற கதிர்வேலா-
சோலைமலை மேவிநின்ற பெருமாளே. (1)

ராகம்-பிலஹரி-சிம்மேந்திரமத்திமம்-தாளம்-கண்டசாப்பு

சடாஜடைய திருமேனி யுடையமுது முதல்ஞான
சொரூபகிரி யிடமேவு முகமாறுங்-

சீர்தெரிய வளிபாட மறைவேதந் நறையாய
துங்கதமிழின் மொழிவேத மணைப்பீச;

ஆர்பவள வொளிபாய அரியபுரி புரமாட
ஆபில்கரமொ டெழில்தோகை மயிலேறி-

அடியணிரு விளையாடு மடமா ரிதாபூஜை
அதிசய மொனருள்பாட வரவேணும்;

விடையேறி அயன்மாலொடு மார்முகி கணமோட
மிடறுடைய விடர்வாரி யருள்நாதன்-

மின்னலினைய இடைமாது இடமருவு குருநாதன்
மிகபக்தி அருணூதி யருள்வோனே;

இடர்களிகள் பிணிபோட எனையருள் குருமாதி
னிலைபினகிர் முலையார்பி னணைமார்பா-

இனியமுது புலியாத னுடைனரவு சதகோடி
யிருடியர்கள் புகழ்நான பெருமானே. (2)

ராகம் - ஹம்சத்வனி, சிந்துபைரவி தாளம் - ஆதி

அதலசேட னாட அகிலமேரு மீதாட
அபின-காளி தானுட அவளோடன்-

றதிரவீசி வாதாடும் விடையிலேறு வாராட
அருகு பூத வேதாள மவையாட;

மதுர வாணி தானுட மலரில் வேதனாட
மருவுவானு ளோராட மதியாட-

வனசமாமியாராட நெடிய மாமனாட
மயிலு மாடி நீயாடி வரவேணும்;

கதைவி டாத தோள்வீம னெதிர்கொள்
வாளியால் நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்-
கதறுகாலி போய்மீள விஜயனேறு தேர்மீது
கனகவேத கோடிநி ஆகமோதும்;
உததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத
உவணமூர்த்தி மாமாயன் மருகோனே
உதயதாம மார்பான ப்ரபுட தேவமாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே (3)

7. தரிசனம்

ராகம்-மோகனம்

பத்தித் திருமுக மாறுடன்
பன்னிரு தோள் களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண்
டேன் செயன் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப்
பெருகிப் புவன மெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர
மாநந்த சாகரத்தே. (1)

ராகம்-மோகனம்

திருவடியுந் தண்டையுஞ் சிலம்புஞ் சிலம்பூடுருவப்
பொருவடிவேலுங் கடம்புந் தடம்புயமாறிரண்டும்
மருவடிவான வதனங்களாறு மலர்க்கண்களுங்
குருவடிவாய் வந்தென் னுள்ளங் குளிரக்குதி
கொண்டவே. (2)

அலங்காரம்

ராகம்-நீலாம்புரி — தாளம்-ஆதி

ஆசைகூர் பத்த னேன்மனோ பத்ம
    மானபூ வைத்து — நடுவேயன்-
பான நூலிட்டு நாவிலே சித்ர
    மாகவே கட்டி — யொருஞான;
வாசம் வீசிப்ப்ர காசியா நிற்ப
    மாசிலோர் புத்தி — யளிபாட-
மாக்ருதா ர்ப்ப மாலிகா லப்ர
    வாளபாத த்தி — லணிவேனோ;
தூசுகா னத்து மீதுவாழ் மூத்த
    தூயல்வே டிச்சி — தனபார-
தூர்த்த தீப்ப்ர தாபமார் பத்த
    தூரிவே முத்தின் — மயில்வாழ்வே;
வீசுமீனப்ப யோதிவாய் விட்டு
    வேகவேதித்து — வருமாசூர்-
வீழமோ திப்ப ராசைநாகத்து
    வீரவேல் தொட்ட — பெருமாளே.

9. அர்ச்சனை

ராகம்-செஞ்சுருட்டி — தாளம்-ஆதி

நாதவிந்துக லாதீ நமோ நம
    வேத மந்த்ர சொரூபா நமோ நம
    ஞான பண்டித ஸாமீ நமோ நம வெகுகோடி
நாம சம்பு குமாரா நமோ நம
    போக அந்தரி பாலா நமோ நம
    நாக பந்த மயூரா நமோ நம. — பரசூரர்

சேத தண்டவி நோதா நமோ நம
கீத கிண்கிணி பாதா நமோ நம
தீர சம்ப்ரம வீரா நமோ நம கிரிராஜ-

தீப மங்கள ஜோதீ நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
தேவ குஞ்சரி பாகா நமோ நம அருள்தாராய்

ஈதலும் பல கோலால பூஜையும்
ஓதலும் குண ஆசார நீதியும்
ஈரமுங் குரு சீர்பாத சேவையு மறவாத-

ஏழ்தலம் புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா;

ஆதரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி-

ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள்
பெருமாளே.

10. நைவேத்தியம்

ராகம்-கானடா

நைவேத்தியம்பு செய்வேத்தன் பதாம்புயத்திற்
பத்திபுந்
நைவேத்தியமுந் தேற்றினார் மாற்றினார்
பாற்றினைத்திக்
நைவேத்தியஞ்சேறு செல்லாத வித்தியத்திற்றி
யினைத்
நைவேத்தியங் குயிர் கூற்றுறி ஆசிரித்தீயுடம்
பே.

11. தீபாராதனை.

ராகம்-கானடா — தாளம்-ஆதி

மூலா நிலமதின் மேவிலை யானாறு
மோகா டவிகடர் — குணநாடி-
மோனநிலைதனை நாளு மவையிலு
மோதா நெறிமுறை — முதல்கூறும்;
ஸீலா விதமுனை தாமே கதிபெற
நேமா ரகசிய — வுபதேசம்-
நீடுழிதனில் வாடா மணியொளி
நீதா பலமது — தருவாயே;
நாலா ருசியமு தாமே திருமறை
நாலா யது செய — மணிமாலை-
நாடாய் தவரிடர் கேடா வரிகரி
நாரா யணார்திரு — மருகோனே;
சூலா திபர்சிவ ஞானோர் யமனுதை
காலார் தரவரு — குருநாதா-
சோதீ திகுதிகு தீதீ செகசெக
சோதீ நடமிடு — பெருமாளே.

12. வரம்வேண்டல்

ராகம்-ஹிந்துஸ்தான் செஞ்சுருட்டி   தாளம்-ஆதி

பத்தியால் யானுனைப்   பலகாலும்-
பற்றியே மாதிருப்   புகழ்பாடி;
முத்தனா மாறெனைப்   பெருவாழ்வின்-
முத்தியே சேர்வதற்   கருள்வாயே;
உத்தமா தானசற்   குணர்நேயா-
ஒப்பிலா மாமணிக்   கிரிவாசா;
வித்தகா ஞானசத்   திநிபாதா-
வெற்றிவே லாயுதப்   பெருமாளே; (1)

ராகம்-ஹேமவதி   தாளம்-ஆதி

வசனமிக வேற்றி   மறவாதே-
மனதுதுய ராற்றி   லுழலாதே;
இசைபயில்ஷ டாக்ஷ   ரமதாலே-
இகபரசெள பாக்ய   மருள்வாயே;
பசுபதிசி வாக்ய   முணர்வோனே-
பழநிமலை வீற்ற   ருளும்வேலா;
அசுரர்கிளை வாட்டி   மிகவாழ-
அமரர்சிறை மீட்ட   பெருமாளே. (2)

ராகம்-சக்ரவாகம்   தாளம்-லலிதா

அபகார நிந்தைபட்   டுழலாதே-
அறியாத வஞ்சரைக்   குறியாதே;
உபதேச மந்திரப்   பொருளாலே-
உனைநானி னைந்தருட்   பெறுவேனோ;
இபமாமு கன்தனக்   கிளையோனே-
இமவான்ம டந்தையுத்   தமிபாலா;
ஜெபமாலை தந்தசற்   குருநாதா-
திருவாவி னன்குடிப்   பெருமாளே. (3)

ராகம்-மஹேயசாயா தாளம்-ஆதி

எழுகடல் மணலை அளவிடி னதிக
மெனதிடர் பிறவி அவதாரம்-
இனியுன தபய மெனதுயி ருடலு
மினியுடல் விடுக முடியாது;
கழுகொடு நரியு மெரிபுழு மறலி
கமலனு மிகவு மயர்வானார்-
கடையுன தபய மடிமைய னடிமை
கடுகியு னடிகள் தருவாயே;
விழுதிக முழுகி மரகத வடிவி
விமலிமு னருளு முருகோனே-
விரிதல மெரிய குலகிரி நெரிய
விசை பெறு மயிலில் வருவோனே;
எழுகடல் குமுற அவுணர்க ளுயிரை
யினைகொளு மயிலை யுடையோனே-
இமையவர் முநிவர் பரவிய புலியு
ரினில்நட மருவு பெருமாளே. (4)

ராகம்-மாண்டு தாளம்-ஆதி

அதிருங் கழல்ப ணிந்து னடியேனுன்-
அபயம் புகுவ தென்று நிலைகாண;
இதயந் தனிலி ருந்து க்ருபையாகி-
இடர் சங் கைகள்கலங்க அருள்வாயே;
எதிரங் கொருவ ரின்றி நடமாடும்-
இறைவன் தனது பங்கி லுமைபாலா;
பதியெங் கிலுமி ருந்து விளையாடிப்-
பலகுன் றிலுமமர்ந்த பெருமாளே. (5)

ராகம்-ஆபோகி   தாளம்-ஆதி

விழுதா தெனவே கருதய தாலே
    வினைசேர் வதுவே   புரிதாக-
விருதா வினிமேல் யுலகா யதமே
    விடவே படவார்   படலாமேல்;
அழுதா கெடவே அவமா கிடநா
    ளடைவே கழியா   துணையாதி-
அலர்தா ளடியே யுறவாய் மருவோ
    ரழியா வரமே   தருவாயே;
தொழுதார் வினைவே ரடியோ டறவே
    துகள்தீர் பரமே   தருதேவா-
சூர்பூபதியே கருணா லயனே
    சுகிர்தா வடியார்   பெருவாழ்வே;
எழுதா மறைமா முடிவே வடிவே
    யிறைவா எனையா   ளுடையோனே-
இறைவா எதுதா வதுதா தனையே
    இனைநா கையில்வாழ்   பெருமாளே. (6)

ராகம் - மோகனம்   தாளம் - ஆதி

நீலங்கொள் மேகத்தின்   மயில்மீதே-
    நீவந்த வாழ்வைக்கண்   டதனாலே;
மால்கொண்ட பேதைக்குன்   மணநாறும்-
    மார்தங்கு தாரைத்தந்   தருள்வாயே;
வேல்கொண்டு வேலைப்பண்   டெறிவோனே;
    வீரங்கொள் சூரர்க்குங்   குலகாலா;
நாலந்த வேதத்தின்   பொருளோனே-
    நானென்று மார்தட்டும்   பெருமாளே. (7)

13. கந்தரநுபூதி

ராகம்-நாட்டை

காப்பு

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானை பதம்பணிவாம்

நூல்

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே. (1)

உல்லாசநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனுநீ யலையோ
எல்லா மறவென் னையிழுந் தநலந்
சொல்லாய் முருகா சுரபூ பதியே. (2)

வானோ புனல்பார் கனன்மா ருதமோ
ஞானோ தயமோ நவினான் மறையோ
யானோ மனமோ வெனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே. (3)

வளைபட் டகைமா தொடுமக் களெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
துளைபட் டுருவத் தொடுவே லவனே. (4)

மகமா யைகளைந் திட வல் லபிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனே
அகமா டைமடந் தையரென் றயருஞ்
சகமா யையுளின் றுதயங் குவதே (5)

ராகம் - ஹிந்தோளம்

திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள் ளிபதம் பணியுந்
தணியா வதிமோ கதயா பரனே. (6)

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதா ணினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே. (7)

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள்பே சியவா
குமரன் கிரிரா சகுமா ரிமகன்
சமரம் பொருதா னவநா சகனே. (8)

மட்டூர் குழன் மங்கையர் மையல்வலைப்
பட்டூ சல்படும் பரிசென் றொழிவேன்
தட்டூ டறவேல் சைலத் தெறியும்
நிட்டூ ரநிரா குலநிர்ப் பயனே. (9)

கார்மா மிசை காலன் வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே. (10)

ராகம் - கானடா

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோ கசிகா மணியே. (11)

செம்மான் மகளைத் திருடுந் திருடன்,
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே. (12)

முருகன் றனிவேன் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே. (13)

கைவாய் கதிர்வேன் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே. (14)

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவவெண் குணபஞ் சரனே. (15)

ராகம் - பிலஹரி

பேராசை யெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோ கதுரந் தரனே. (16)

யாமோ தியகல் வியுமெம் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனாற்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீ ரினியே. (17)

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
பதிகா வலசூ ரபயங் கரனே. (18)

வடிவுந் தனமும் மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா வயில்வே லரசே
மிடியென் றொருபாவி வெளிப்படினே. (19)

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா வுபதேச முணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே. (20)

ராகம் - ஷண்முகப்பிரியா

கருதா மறவா நெறிகா ணவெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே. (21)

காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே (22)

அடியைக் குறியா தறியா மையிருள்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேள் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே. (23)

கூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே
சேர்வே னருள்சே ரவுமெண் ணுமதோ
சூர்வே ரொடுகுன் றுதொளைத் தநெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே. (24)

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ அடியே னலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றியசே வகனே. (25)

ராகம் - சாமா

ஆதா ரமிலே னருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவினோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே. (26)

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலே றியவா னவனே. (27)

ஆனா அமுதே யயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே. (28)

இல்லே யெனுமா யையி லிட்டனைநீ
பொல்லே னறியா மைபொறுத் திலையே
மல்லே புரிபன் னிருவா குவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே. (29)

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றொவ்வா தவெதன வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவார் றிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே. (30)

ராகம் - சிந்துபைரவி

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனவென் னைவிதித் தனையே
தாழ்வானவை செய்தன தாமுளவோ
வாழ்வா யினிநீ மயில் வாகனனே. (31)

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவேடர் குலப்பிடி தோய்
மலையே மலைகூ றிடுவா கையனே. (32)

சிந்தா குலவில் லொடுசெல்வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்
மந்தா கினிதந் தவரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே. (33)

சிங்கார மடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக்கு வரந் தருவாய்
சங்க்ரா மசிகா வலசண்முகனே
கங்கா நதிபால க்ருபா கரனே. (34)

விதிகா ணுமுடம் பைவிடாவினையேன்
கதிகாண மலர்க் கழலென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே. (35)

ராகம் - மோகனம்

நாதா குமரா நமவென் றரனார்
ஓதா யெனவோ தியதெப் பொருடான்
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே. (36)

கிரிவாய் விடுவிக்கிர மவேலிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியோ டுமகந் தையையே. (37)

ஆதா ளியையொன் றறியே னையறத்
தீதா ளியையாண் டதுசெய் புமதோ
கூதா ளகிரா தகுலிக் கிறைவா
வேதா ளகணம் புகழ்வே லவனே. (38)

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டனையென் றுமுடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே. (39)

வினையோ டவிடுங் கதிர்வேல் மறவேன்
மனையோ டுதியங் கியமங் கிடவோ
சுனையோ டருவித் துறையோடு பசுந்
தினையோ டிதணோ டுதிரிந் தவனே. (40)

ராகம் - பைரவி

சாகாதெனையே சரணங்களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னோபதே சிகனே. (41)

குறியைக் குறியாது குறித் தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்று
அறிவற் றறியா மையுமற் றதுவே. (42)

தூசா மணியுந் துகிலும் புனைவா
ணேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அநுபூ திபிறந் ததுவே. (43)

சாடுந் தனிவேன் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே (44)

கரவா கியகல் வியுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோ கதயா பரனே. (45)

ராகம் - மாண்டு

எந்தா யுமெனக் கருடந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே. (46)

ஆறு றையுநீத் ததன்மே னிலையைப்
பேறு வடியேன் பெறுமா றுளதோ
சீறு வருசூர் சிதைவித் திமையோர்
கூறு வுலகங் குளிர்வித் தவனே. (47)

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே. (48)

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம்மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையுங் க்ருபைசூழ் சுடரே. (49)

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
னதிபுத் திரஞா னசுகா திபவத்
திதிபுத்திரர்வீ றடுசே வகனே, (50)

ராகம் - மத்தியமாவதி

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. (51)

14. நன்றி மறவாத் தன்மை

ராகம்-கேதாரகௌளம் சௌராஷ்டிரம். தாளம்-ஆதி

கொந்து வார்குர வடியினு மடியவர்
சிந்தை வாரிஜ நடுவினு நெறிபல
கொண்ட வேதநன் முடியினு மருவிய
குருநாதா

கொங்கி லேர்தரு பழநியி லறுமுக
செந்தில் காவல தணிகையி லிணையிலி
கொந்து காவென மொழிதர வருசம
யவிரோத;

தந்த்ர வாதிகள் பெறவரி யதுபிறர்
சந்தியாதது தனதென் வருமொரு
சம்ப்ர தாயமு மிதுவென வுரைசெய்து
விரைநீபச்-

சஞ்சரீகரி கரமுரல் தமனிய
கிண்கிணீமுக விதபத யுகமலர்
தந்த பேரருள் கனவிலு நனவிலு
மறவேனே;

சிந்து வாரமு மிதழியு மிளநவ
சந்த்ர ரேகையு மரவமு மணிதரு
செஞ்ச டாதரர் திருமக வெனவரு
முருகோனே-

செண்ப காடவி யினுமிக னினுமுயர்
சந்த னுடவி யினுமுறை குறமகள்
செம்பொனூபுர கமலமும் வளையணி
புதுவேயும்;

இந்து வாண்முக வனசமு ம்ருகமத
குங்கு மாசல யுகளமு மதுரித
இந்த ளாம்ருத வசனமு முறுவலு மபிராம-

இந்த்ர கோபமு மரகத வடிவமு
மிந்த்ர சாபமு மிநுகுழையொடுபொரு
மிந்த்ர நீலமு மடலிடை யெழுதிய
பெருமாளே.

ராகம்-ஆரபி, தோடி. தாளம்-ஆதி

ஆனத ஞான புத்தி யைக்கொ டுத்ததும்
ஆராயு நூல்க ளிற்க ருத்த ளித்ததும்
ஆதேச வாழ்வி னிற்ப்ர மித்தி ளைத்துயி
ரழியாதே-

ஆசாப யோதியைக்க டக்க விட்டதும்
வாசாம கோசரத்திருத்து வித்ததும்
ஆபாத னேன்மி கப்ர சித்தி பெற்றினி
துலகேழும்;

யானைக நாம அற்பு தத்தி ருப்புகழ்
தேனூற வோதி யெத்தி சைப்பு றத்தினும்
ஏடேவு ராஜ தத்தி னைப்பணித்ததும்
இடராழி-

ஏறாத மாம லத்ர யக்கு ணத்ரய
நாறுவி கார புற்பு தப்பி றப்பற
ஏகம மாயெனக்க நுக்ர கித்ததும்
மறவேனே;

மாநாக நாண்வ ளைப்பு ரத்து வக்கியொர்
மாமேரு பூத ரத்த னுப்பி டித்தொரு
மாலாய வாளி யைத்தொ டுத்த ரக்கரி
லொருமூவர்-

மாளாது பாத கப்பு ரத்ர யத்தவர்
தாளாக வேமு தற்சி ரித்த வித்தகர்
வாழ்வேவ லாரி பெற்றெடுத்த கற்பக
வனமேவும்;

தேநாய காளனத் துதித்த வுத்தம
வாளுடர் வாழு விக்ர மத்தி ருங்கழல்
சேராத சூர னைத்து ணித்த டக்கிய
வனமோகிச்-

சேறாய சோரி புக்க ளக்கர் திட்டெழ
மாறுநி சாச ரக்கு லத்தை யிப்படி
சீராவி னால றுத்த றுத்தொ துக்கிய
பெருமாளே. (2)

15. முருகன் பெருமை

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன்
முத்தமிழால்
வைதாரை யுமங்கு வாழவைப் போன்வெய்ய
வாரணம்போற்

கைதா னிருப துடையான் தலை பத்துங் கத்தரிக்க
எய்தான் மருக னுமையாள் பயந்த விலஞ்சி
யமே. (1)

ராகம்-பீம்பிளாஸ்மிசரம். தாளம்-ஆதி

கந்த னென்ற பெயரா னிடங்
காதல் கொண்டேன் தோழி
காரண னுலகுக் கெல்லாங்
கதிர்காமன் தோழி
எந்த னுள்ளங் கொள்ளைகொண்ட
கள்வனடி தோழி
எல்லாவற்றிலு நிறைந்த
காந்தனடி தோழி
தானென்றகந்தை கொண்டாற்
தாளானடி தோழி
தக்ஷணமதை யழித்து
ரக்ஷிப்பாண்டி தோழி

தன்னந்தனியானவற்கு
துணையாவான் தோழி
தன்னையறமறந்தாரையுந்
தான் மறவான் தோழி
நானற்றாருள்ளங் கோயில்
கொண்டவண்டி தோழி
நல்ல தெல்லாந் தன்னிடத்தே
கொண்டவண்டி தோழி
தேனொத்த பண்ணிசையிற்
தேர்ந்தவண்டி தோழி
திக்கியன்பாய் பாடினாலும்
திருப்திகொள்வான் தோழி

தேவாதிதேவர் தொழும்
தெய்வமடி தோழி
தெய்வயானை [வள்ளி] தழுவு மெந்தன்
தெய்வமடி தோழி

பன்னிருகைகொண்டன்பர்
பயமழிப்பான் தோழி
தன்னிலையைத் தந்தன்பரைத்
தாங்கிடுவான் தோழி - (கந்தனென்ற)

கல்லெனச்சிலம் பொலிக்க
வருவானடி தோழி
கல்நெஞ்ச முருக்குமவன்
வேலிணையி தோழி

அன்பருள்ளங்குளிர ஆடும்
மயிலானடி தோழி
இன்பம் வரக் கூவுமவன்
சேவற்கொடி தோழி

அகன்ற மார்பிற்கடம்புகண்டா
லாசைவரும் தோழி
புகன்ற சொல்லில் வேதமணம்
வீசுமடி தோழி

ஆறுமுகப் புன்சிரிப்பைக்
கண்டுவிட்டால் தோழி
ஆ! ஆ!! இது வேசத்திய
இன்பமடி தோழி

உருகிமுருகா என்றவர்முன்
ஓடிவருவான் தோழி
வருக வருக என்றவனை
வாழ்த்திடுவோந் தோழி

என்னவென்று சொல்வேனடி
என் முருகன் பெருமை
இன்பமாக ஹரா ஹரா
என்றாடிடுவோந் தோழி

ஆதிபராசக்திபாலன் அழகன்
கதிர்காமன்
ஆவலையனைத்தின்புமுற
ஓடிவாடி தோழி.

(கந்தனென்ற)

---

16. போற்றி.

ராகம் - மத்திமாவதி

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி
கருணை போற்றி
எவருந் துதிக்க நின்ற வீராறு தோள்
போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேன் மலரடி
போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல்
போற்றி போற்றி.

17. ஆனந்தம்.

ராகம் - ஷண்முகப்பிரியா

போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாதொன்று வந்து
வந்து
தாக்கு மனோலயந் தானே தருமெனைத்
தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல் லொணாஇந்த
வானந்தமே.

---

18. நமஸ்காரம்.

ராகமாலிகை.

வேலு மயிலு நினைந்தவர்
தந்துயர் தீர அருள்தரு கந்தா நின்னருள்தாராய்
முருகா சரணம் சரணம்!

பணியு மடியார் சிந்தை மெய்ப்
பொருளதாக நவில் சரவணபவா
சரணம் சரணம்!

அடியவ ரிச்சையி லெவை யெவையுற்றன
அவைதரு வித்தருள் பெருமாளே
சரணம் சரணம்!

வேண்டிய போதடியார் வேண்டிய போகமது
வேண்ட வெறாதுதவு பெருமாளே
சரணம் சரணம்!

வேண்டுமடியர் புலவர் வேண்ட அரிய பொருளை
வேண்டுமளவி லுதவும் பெருமாளே
சரணம் சரணம்!

சிவமார் திருப்புகழை எனுமுறையினிற் புகழ
சிவஞான சித்திதனை யருள்வாயே
முருகா சரணம் சரணம்!

கலியாண சுபுத்திரனாக
குறமாது தனக்குவிதேனாக
கவினாரு புயத்திலுலாவி விளையாடிக்-

களிகூரு முனைத் துணைதேடு
மடியேனைச் சுகப்படவே வை
கடனாகு மிதுக்கனமாகு முருகோனே
சரணம் சரணம்!

சஞ்சலமான பைத்தியமாகி தடுமாறித்
தவியாமல் பிறப்பையும் நாடி
யதுவேரை யறுத்துனை யோதி
தலமீதில் பிழைத்திடவே நின்னருள்தாராய்
பவரோக வைத்திய நாதப் பெருமாளே
சரணம் சரணம்!

சகல துக்க முமறச் சகல சற்குணம் வரத்
தரணியிற் புகழ் பெறத் தகைமை
பெற்றுனது பொற்
சரண மெப்பொழுது நட்பொடு நினைத்திட
அருள் தருவாயே
முருகா சரணம் சரணம்!

நினைத்த காரியம் அநுக்கூலமே புரி பெருமாளே
சரணம் சரணம்!

வழைக் கிரங்கும் பெருமாளே சரணம் சரணம்!
வழைகள் வியாகுல மிதேதெனு விருவினை
யேவர் புகழ்வார் மறையுமென்சொலாதோ
முருகா சரணம் சரணம்!

குறிஞ்சிவாழும் மறவர்நாயக ஆதிவிநாயக
ரிளைய நாயக காவிரி நாயக
வடிவிநாயக ஆனைத நாயக எங்கள் மானின்

மயிழுநாயக தேவர்கள் நாயக
கவுரி நாயகனுர் குருநாயக
வடிவதாமலே யாவையு மேவிய தம்பிரானே
சரணம் சரணம்!

சிவத்தின்சாமி மயில்மிசை நடிக்குஞ்சாமி
யெமதுளே
சிறக்குஞ்சாமி சொருபமி தொளிகாணச்
செழிக்குஞ்சாமி பிறவியை யொழிக்குஞ்சாமி
பவமதை
தெழிக்குஞ்சாமி முனிவர்க ளிடமேவும்
தவத்தின்சாமி புரிபிழை பொறுக்குஞ்சாமி
குடிநிலை
தரிக்குஞ்சாமி யசுரர்கள் பொடியாகச்
சதைக்குஞ்சாமி யெமைப்பணி விதிக்குஞ்சாமி
சரவண
தகப்பன்சாமி யெனவரு பெருமாளே
சரணம் சரணம்!

கலக்குண்டாகு புவிதனிலெனக்குண்டாகு
[பணிவிடை
கணக்குண்டாதல் திருவுள மறியாதோ
முருகா சரணம் சரணம்!

அசல குலபதி தருமொரு திருமகள்
அமலை விமலைகளெழுவரும் வழிபட
அருளி அருணையி லுறைதரு மிறையவ
ளபிராமி-

அநகை அநுபவை அநுதயை அபிநவை
அதல முதலெழு தலமிவை முறைமுறை
அடைய அருளிய பழையவ ளருளிய
சிறியோனே
முருகா சரணம் சரணம்!

வசுவ பசுபதி மகிழ்தர வொருமொழி
மவுன மருளிய மகிமையு மிமையவர்
மரபில் வனிதையும் வனசரர் புதல்வியும்
வடிவேலும்

மயிலு மியலறி புலமையு முபநிட
மதுர கவிதையும் விதரண கருணையும்
வடிவு மிளமையும் வளமையு மழகிய
பெருமாளே
சரணம் சரணம்!

இனி யடியேனுக் கிசைய இதுபொருளென
[அறிவுறவொரு
வசனமுற இரு வினையற மலமற
இரவு பகலற எனதற நினதற அநுபூதி

இனிமை தருமொரு தனிமையை மறைகளி
னிறுதி யறுதியி டவரிய பெறுதியை
இருமை யொருமையில் பெருமையை
வெளிபட மொழிவாயே முருகா
சரணம் சரணம்!

ஆடிய மயிலினை யொப்புற்று
பீலியு மிலையுமு டுத்திட்டு
ஆரிறு மழகுறி கப்பெற்று யவளுளும்

ஆகிய விதகம்பிசை யுற்றிட்டு
மானின மருளவி ழித்திட்டு
ஆயுத யவமொரு கைச்சுற்றி விளையாடும்;

வேடுவர் சிறுமி யொருத்திக்கு
யான் வழி யடிமையெனச் செப்பி
விறுள அடியிணை யைப்பற்றி பலகாலும்
வேதமு மமரு மெய்ச் சக்ர
வாளமு மறியவி லைப்பட்டு
பேருவில் மிகவு மெழுத்திட்ட பெருமாளே
சரணம் சரணம்!

அந்தண்மறை வேள்வி காவற்கார சரணம்!
செந்தமிழ் சொல் பாவின் மாலைக்காரா சரணம்!
அண்ட ரூபகார சேவற்காரா சரணம்!
முடிமேலே அஞ்சலி செய்வோர்கள்
நேயக்காரா சரணம்!
குன்றுருவ எவும் வேலைக்கார சரணம்!
அந்தம் வெகுவான ரூபக்கார சரணம்!
எழிலான சிந்தூரமின் மேவு போகக்கார
சரணம்!

விந்தை குறமாது வேளைக்கார சரணம்!
செஞ் சொலடியார்கள் வாரக்கார சரணம்!
எதிரான செஞ்சமரை மாயு மாயக்கார
சரணம்!
துங்கரண சூர சூறைக்கார சரணம்!
செந்தினகர் வாழுமாண்மைக்காரப்
பெருமாளே சரணம்! சரணம்!

நான்முஞ்சர் மனைவாசல் தேடித் தேடி யுழலாமல்
எனக்கு முந்தை வினையே வாராமற் போக
செம்பொன் மயில் மீதிலெப்போது
வருவாயோ? முருகா சரணம் சரணம்!

வேதமூர்த்தி திருத்தணி வெற்புறை
சோதி கார்த்திகை பெற்ற விளக்கொளியே!

அடியேன் வினைப்பகை யறுத்து, நினைத்ததும்
முடித்து
மனத்துயர் கெடுத்து, அடியேனை வளர்த்தருள்
கிருபைக் கடலே முருகா சரணம்! சரணம்!

சித்ரக வித்துவ சத்த மிகுத்ததி
ருப்புக ழைச் சிறிதடியே னுஞ்
செப்பென வைத்துல கிற்பரவத்தெரி
சித்தவ நுக்ரக மறவேனே
முருகா சரணம் சரணம்!

நீ தந்த பொருள் கனவிலு நனவிலு மறவேனே
முருகா சரணம் சரணம்!

ராகம் - மாயாமாளவகௌளம்

தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற்
சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது கோட்டிக்கைந்
நாற்றிநரம்
பாலார்க் கையிட்டுத் தசைகொண்டு மேய்ந்த
அகம்பிரிந்தால்
வேலாற் கிரிதொளைத் தோளிரு தாளன்றி
வேறில்லையே. (1)

ராகம் - முகாரி

கதிதனை யொன்றையுங் காண்கின்றி லேன்கந்த
வேல்முருகா
நதிதனை யன்னபொய் வாழ்விலன் பாய் நரம்
பாற்பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடு மாறெனைப்
போதவிட்ட
விதிதனை நொந்து நொந் திங்கேயென் றன்மனம்
வேகின்றதே. (2)

ராகம் - கானடா

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக்
காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்
கொடிபோற்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்
கின்றதே. (3)

ராகம் - கரகப்பிரியா

மைவருங் கண்டத்தர் மைந்தகந் தாவென்று
வாழ்த்து மிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறி யேன்கற்ற
கல்வியும் போய்ப்
பைவருங் கேளும் பதியுங் கதறப் பழகிநிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன்
னடைக்கலமே. (4)

19. மங்களம்.

ராகமாலிகை. தாளம்-ஆதி

முருகா முருகா முருகா முருகா
முருகா முருகா திருமால் மருகா

வருக வருக வரமே தருக
பெருகா தலுடன் பணிந்தே னருள்தா
திருவுங் கலையும் மலையின் மகளும்
தினமுந் தழுவும் மழலை குகனே. (1)

அணியும் மணியு மடியார் விழியும்
அணியுந் தோளா அழகா வருக
அடியா ருளமே அமருந் தேவா
முடியா முதலே முருகா சரணம். (2)

கணமு முனைநான் மறவேன் மறவேன்
கருணைக் கடலே கண்ணின் மணியே
வேலும் மயிலுங் கோழிக் கொடியும்
விரும்பிக் கொள்ளும் விமலா சரணம். (3)

காலின் சிலம்பி னொலி-கொஞ் சிடவே
கந்தா குதித்தென் முன்னே வருவாய்
பாலில் நெய்போற் பலவுயிருள் நீ
பரிவாய் நின்றாய் பரி பூரணனே. (4)

அருளும் பொருளும் அருள் வான் நீயே
மருளும் மனமும் மாற்றுவா னீயே
பொருளுள் அழியாப் பொருளும் நீயே
புனிதா முருகா தருவாய் உன்னை. (5)

உந்தனை நினைந்து வந்தனை செய்து
தொந்தங் கடந்து சுகம் பெற்றிடவே
சந்திர முகமும் திருத்தாள் மலரும்
செந்தமிழ் முருகா இன்றருள் தரவா. (6)

அன்னையுந் தந்தையும் அன்பரா வானும்
என்னையு மானிடனாக்கிய கோனும்
பன்னிரு கையுடன் பவமழிப் பானும்
கன்னி பராசக்தி பால நீயன்றோ. (7)

பாடும் பணியே பணியாய் யன்பர்
கூடும் இடமே கோவில தென்று
நாடும் மனமே படைக்க வெனக்கு
ஆடும் மயிலா அருள்தா அருள்தா. (8)

முருகன் குமரன் குகனென் றுமொழிந்து
உருகும் அடியார் நடுவே யிருந்து
பெருகா தற்கண் ணீர்வூற் றெழவே
பேயாய் திரிய இன்றருள் பாலா. (9)

முருகா திருமால் மருகா வருக
வருக உனை நான் மறவா வகையில்
தருக வரமே வேலுடா வுள்ளம்
தருக வருக ஒன்று கிடவே. (10)

நெஞ்சக் கனகல் உருகச் செய்தாய்
வஞ்சப் பகைகள் ஒழியச் செய்தாய்
கொஞ்சி யேயுன்னை ப்பாடச் செய்து
அஞ்சே லெனவெனை யாண்டா யப்பா. (11)

ஞாலம் எல்லாம் நீயே யானாய்
யானும் நீயும் ஒன்றே என்றாய்
பாலும் தேனும் கலந்தாற் போலே
பரமா னந்தம் பெற்றேன் பெற்றேன். (12)

முருகா திருமால் மருகா சரணம்
முருகா குறமின் கணவா சரணம்
முருகா அன்பர் விருந்தே சரணம்
முருகா அருணை கிரியே சரணம். (13)

முருகா வாழ்க நினதிரு பாதம்
முருகா வாழ்க திருச்சத் சங்கம்
முருகா வாழ்க நின்புகழ் சொல்வோர்
முருகா வாழ்க எல்லா உலகும். (14)

ராகம் - மத்திமாவதி

ஆறிரு தடங்தோள் வாழ்க அறுமுகம்வாழ்க
வெற்பை
கூறுசெய்தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்கச்
செவ்வேள்
ஏறிய மஞ்ஞைவாழ்க யானைதன் அணங்குவாழ்க
மாறிலா வள்ளிவாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்.

20. சாந்தி

ஆடும் பரிவேல் அணி சேவலெனப்
பாடும் பணி பெறில் அதுவே சாந்தி
முருகன் குமரன் குகனென்று மொழிக்
துருகும் செயல் பெறில் அதுவே சாந்தி
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன்றென நின்றதுவே சாந்தி
ஆசாங்களந்தகளாயின பின்
பேசா அநுபூதி பிறக்குமிதுவே சாந்தி.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.
